பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 07 ஞாயிற்றுக்கிழமை (21.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

# இராணுவம் சூடு இளைஞன் பலி



## முகமாலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 24 வயதுடைய இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.**

**இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை 6.15 மணியளவில் முகமாலையில் இடம்பெற்றுள்ளது.**

சட்டவிரோதமாக மணல் ஏற்றச் சென்றதாக நம்பப்படும் உழவு இயந்திரத்தின் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே இளைஞன் கொல்லப்பட்டுள்ளார் என பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரத்தின் பின் பெட்டியில் நான்கு இளைஞர்கள் இருந்தனர் எனவும் இதில் கெற்பேலியை 15

## கொடிகாமத்தில் கோர விபத்து இரு இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் - டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் கஜீவன் (வயது - 18) மற்றும் தம்பிராசா புவிதரன் ஆகிய இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். 15

## இளைஞன் படுகொலை

## ஏ9 வீதியை மறித்து பொதுமக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்டதை 15

## நெருப்பு வளைய சூரியகிரகணம்

### இன்று தென்படும்

(கொழும்பு)

நெருப்பு வளைய சூரியகிரகணம் என பெயரிடப்பட்டுள்ள 2020ம் ஆண்டின் முதலாவது சூரிய 15

## நயினாதீவு நாகபூஷணி அம்மனின் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

நேற்றைய கொடியேற்ற உற்சவத்தில் 15



## மூவாயிரம் இராணுவத்தை ஒரே இரவில் கொன்றேன்

### கருணாவின் சர்ச்சைப் பேச்சால் தென்னிலங்கையில் பாரிய எதிர்ப்பு

(கொழும்பு)

ஆனையிறவுப் பகுதியில் வைத்து ஒரே இரவில் தான் இரண்டாயிரம் 15

## 71ஆவது பிறந்தநாளை கொண்டாடிய கோட்டா



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மத அனுஷ்டானங்களுக்கு முன்னுரிமை வழங்கி நேற்று தனது 71ஆவது 15

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லையில் கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு 15



## கொரோனா பரவலால் உலகம் ஆபத்தான கட்டத்தில்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உலகளவில் 1,81,005 பேர் கொரோனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர்.

ஒரே நாளில் இந் 15

### யாழ்.நகர்ப் பகுதியில்

## ஹெரோயினுடன் நால்வர் கைது

(கொடிகாமம்)

யாழ்.நகர்ப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் நான்கு பேர் நேற்று சனிக்கிழமை மாலை 15

## உறவுகளை அச்சுறுத்திய புலனாய்வாளர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் நேற்று தமது தொடர்போராட்டத்தின் 1200 ஆவது நாளில் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். 15

# மரண அறிவித்தல்



தோற்றம்
25 - 03 - 1926

மறைவு
20 - 06 - 2020

## திருமதி. கனகசபை கண்மணி

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கண்மணி நேற்று (20.06.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அவர்கள் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையாவின் அன்புச் சகோதரியும், கௌரி, புவனாம் பிகை, வதனாம்பிகை, யோகாம்பிகை, மல்லிகா, சிவகுமார், காலஞ்சென்ற அம்பிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரசாந், பைரவி, மாதுளன், சகானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மகாலிங்கம், தேவராஜா, காலஞ்சென்ற மாலதி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர் களான செல்லம்மா, வேலாயுதம், ஆறுமுகம், சங்கரப்பிள்ளை, சீனித்தம்பி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலத்திற்கு (இந்துமயானம்) எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-9739)

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு.
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
021 221 4688,
077 399 5946

# வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் கப் ரக வாகனத்தில் ஏற்றப்பட்ட 6 வேப்பமர குற்றிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கப்ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்த குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ம-3,250,299)


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(3074)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### பதவி வெற்றிடம்

**உபவிடுதிக் காப்பாளர்கள் : ஆண், பெண்**

- ◈ க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- ◈ விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
- ◈ வயதெல்லை : 25 - 50
- ◈ சம்பள அளவுத் திட்டம் : ரூபா 12,010 - 6×250 + 14×280 - 17, 430 /=
- ◈ ஆரம்பச் சம்பளம் : ரூபா 12,010.00 ( மாதமொன்றுக்கு ).

**பாதுகாப்பு அலுவலர் ( பகல் - பெண் )**

- ◈ க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- ◈ வயதெல்லை : 25 - 50
- ◈ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 05.07.2020 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
தொலைபேசி இல : 021 222 6525

தி. செல்வமனோகரன்
செயலாளர்

# மரண அறிவித்தல்



## திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி (முரளியம்மா)

பிறப்பு
03.04.1928

இறப்பு
20.06.2020

சர்வோதய வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி அவர்கள் நேற்று (20.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வெள்ளைச்சி தம்பதிகளின் அன்பு மகளும் பாலசிங்கம் (கனடா), சந்தாணம் (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்), தர்மரத்தினம் (தர்மா - லண்டன்), காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் (கிங்கோ-மேஜர் முரளி) இராஜகோபால் (வீ.வே.தம்பி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3071)

சர்வோதய வீதி,
ஆவரங்கால்.

தகவல்:-
குடும்பத்தினர்

# ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்டால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல

## கடந்த ஆட்சியின் பலவீனம் அதுவே-மகிந்த

**(கொழும்பு)**

**ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துவர்களாக இருந்தால் மாத்திரமே சிறந்த அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். அதற்கமைய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் நிலையான அரசாங்கம் தோற்றுவிக்கப்படும் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**



குருநாகல் கிரியாகல பிரதேசத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்ட விதமாகவே செயற்பட்டார்கள். இவர்களின் செயற்பாடுகளினால் அமைச்சரவை பலவீனமடைந்தது. அதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நிர்மாணப்பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படவில்லை. மாறாக காலத்தை வீணடிக்கும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். வகுக்கப்படும் கொள்கை ஒருமித்ததாகக் காணப்பட்டால் மாத்திரமே இரு தலைவர்களும் இணைந்து அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். ஆகவே ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறுதல் அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு நலன்புரி வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட இலங்கைப் பணியாளர்களுக்கு நலன்புரி வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிய 21 இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பலியாகியுள்ளதுடன் மேலும் 2 ஆயிரம் பேர் வரையில் தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 12 - 1935 | 20 - 06 - 2020 |

### கணபதிப்பிள்ளை கந்தசாமி

**(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி)**

அல்வாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று ( 20.06.2020 ) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக்கணவரும் பிரபாகரன், பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும் கேசவன், பாலரஜனியின் அன்பு மாமனாரும் அஸ்வின், விக்கினேஸ், அவனிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ( 21.06.2020 ) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு பி.ப 3.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் தெற்கு, அல்வாய். (C-9741) தகவல்:- குடும்பத்தினர்




COMMITMENT TO CARING AND CURING

நோயாளி தகவல் உதவியாளர்

நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் முதல் தர சுகாதார சேவை வழங்குநர் லங்கா மருத்துவமனை 'யாழ் மதர் கியார் மருத்துவமனை' இல் அமைந்துள்ள தனது யாழ் தகவல் தொடர்பு மையத்திற்கு நோயாளி தகவல் உதவியாளர் ஒருவரைத் தேடுகின்றது.

லங்கா மருத்துவமனையின் சகல சிறப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்கள், வைத்திய சிகிச்சை தொகுப்பு விலைகள், ஆலோசனை விவரங்களை நோயாளிகளுக்கு வழங்குதல் மற்றும் மருத்துவமனை சேவைகள், ஆம்புலன்ஸ்/ அவசரகால சேவைகளை மேம்படுத்துவதுடன் யாழ்ப்பாணத்தில் லங்கா மருத்துவமனையால் நடத்தப்படும் மருத்துவ கிளினிக்குகளை ஒருங்கிணைப்பதற்கும் நோயாளி தகவல் உதவியாளர் பொறுப்பாக இருப்பார்

சிறந்த வேட்பாளர் தகைமைகள்

+ G.C.E A / L தேர்ச்சி
+ ஆங்கிலத்தில் நல்ல தகவல் தொடர்பு திறன், தமிழ் மொழி அறிவு கூடுதல் நன்மையாக இருக்கும்
+ கணிணி அறிவு
+ இனிமையான தன்மை, புத்திசாலி மற்றும் வெளிச்செல்லும் ஆளுமை
+ 30 க்குக் குறைவான வயது
+ தொடர்புடைய பணி பகுதியில் குறைந்தபட்சம் 01 ஆண்டுபணி அனுபவம்

இந்த விளம்பரத்தின் 7 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தை 2 சம்பந்தமில்லாத நடுவர்களின் முகவரி, தொடர்பு எண்கள் மற்றும் உங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் அனுப்பவும். உறை மேல் இடது கை மூலையில் அல்லது மின்னஞ்சலின் பொருள் வரியில் நீங்கள் விண்ணப்பிக்கும் தொழில் நிலையை எழுதுங்கள்.

SENIOR MANAGER HUMAN RESOURCES
The Lanka Hospitals Corporation PLC (PQ 180)
578, Elvitigala Mawatha,
Colombo-05.
E - mail :- careers@lankahospitals.com

LANKA HOSPITALS

(C-920)

# வவுணதீவில் பொலிஸாரைக் கொலை செய்தவர்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளுக்கும் தொடர்பு

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பொலிஸ் அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் குறித்த விசாரணையின் சந்தேக நபர்களை விசாரித்த போதே, வவுணதீவு பொலிஸ் காவலரணில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் மர்மம் துலக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சமன் வீரசிங்க தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

சமன் வீரசிங்கவின் சாட்சியில் "கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி நான் மட்டக்களப்பில் இருந்தேன். சியோன் தேவாலய குண்டுவெடிப்பு தொடர்பிலான விசாரணைகளில் சி.சி.ரி.வி. ஊடான அறிவியல் தடயங்களை மையப்படுத்திய விசாரணைகள் அப்போது இடம்பெற்றன.

மாலை 4.30 மணியளவில் அப்போது சி.ஐ.டி.பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாகமுல்லவும் என்னைத் தொலைபேசியில் அழைத்தனர். அவர்கள், காத்தான்குடி பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகவும் அவரைச் சென்று பொறுப்பேற்குமாறும் எனக்கு ஆலோசனை வழங்கினர்.

அதன்படி நான் மாலை 4.45 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து காத்தான்குடி நோக்கிச் சென்றேன். 5 மணியாகும் போது காத்தான்குடி பொலிஸ் நிலையத்தை அடைந்தேன். மாலை 6.05 மணியாகும் போது பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஸ்தூரி ஆரச்சியிடமிருந்து சந்தேக நபரை பொறுப்பேற்றேன்.

புதிய காத்தான்குடி - 3 இனைச் சேர்ந்த மொஹம்மட் சரீப் ஆதம்லெப்பை என்பவரே கைது செய்யப்பட்ட சந்தேக நபராவார். அவரை இரவு 7.25 மணியாகும் போது, சி.ஐ.டி.யின் மட்டக்களப்பு அலுவலகத்துக்கு அழைத்து வந்து விசாரணைக்கு உட்படுத்தினோம். அப்போது விசேட தகவல் ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. அது வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரின் கொலையுடன் தொடர்புபட்ட விடயமாகும்.

இந்நிலையில் அது சார்ந்த தடயம் ஒன்றினைத்தேடி அந்த சந்தேக நபரையும் கூட்டிக்கொண்டு நிந்தவூர் நோக்கிச் சென்றோம். போகும் போது சந்தேக நபர் அதிகாரிகளின் பாதுகாப்புக்கு அதிரடிப் படையின் உதவியும் பெறப்பட்டது. அவ்வாறு செல்லும் போது எமது பயணத்துக்கு சாய்ந்தமருது பகுதியில் தடங்கல் ஏற்பட்டது.

சாய்ந்தமருதினை அடைந்த போது அங்கு இராணுவம் அதிரடிப்படை குவிக்கப்பட்டு, கவச வாகனங்கள் வீதியில் மறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டு ஒரு யுத்த களமாக அப்பகுதி காட்சியளித்தது.

அங்கிருந்த அதிரடிப்படை கட்டளை அதிகாரியான பொலிஸ் அத்தியட்சகரிடம் நாம் எமது பாதுகாப்புக்கு வந்த அதிரடிப் படையின் பிரதான பொலிஸ் பரிசோதகர் மாரசிங்கவும் சென்று விடயத்தை தெளிவுபடுத்தினோம். அதனையடுத்து தடைகள் அகற்றப்பட்டு எமது பயணத்தை தொடர வாய்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில் நிந்தவூரை அடைந்த நாங்கள், சந்தேக நபரின் வழிகாட்டலுக்கு அமைய, மஸ்ஜிதுல் முஸ்தகீம் வீதியூடாக பயணித்து சர்வதேச பாடசாலை ஒன்றின் அருகே திரும்பி 214 ஆம் இலக்க வீட்டை அடைந்தோம். அவ்வீட்டை நாம் முழுமையாக சோதனையிட்டோம்.

அதன்போது வீட்டின் சமயலறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்றினையும் அதற்கு பயன்படுத்தும் 4 தோட்டாக்களையும் கண்டுபிடித்தோம்.

ஒரு துப்பாக்கிக்கு இரு வேறு இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அந்த ரிவோல்வரில் ஒரு இடத்தில் உள்ள இலக்கம், அதாவது பொலிஸார் கடமைக்கு எடுத்துச் செல்லும் போது குறிப்பீடு செய்யும் இலக்கம் அழிக்கப்பட்டிருந்தது.

அந்த வீட்டிலிருந்து 3 மடிக் கணனிகள், சுவிட்ச் ரக கையடக்கத் தொலைபேசி, உடைகள் அடங்கிய 5 பொதிகள், புத்தகங்கள், சி.டி.க்கள், எந்தரமுல்ல, வத்தளை முகவரியைக் கொண்ட வீடொன்றின் 2019.02.19 ஆம் திகதியைக் குறிக்கும் நீர், மின்சாரக்கட்டணப் பட்டியல் ஆகியன எமது பொறுப்பில் எடுக்கப்பட்டன. இந்நிலையில் அங்கிருந்து நாம் மீள மறுநாள் அதாவது 2019.04.27 அதிகாலை 1.45 மணியாகும் போது காத்தான்குடியை அடைந்தோம்.

அங்கு ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய நாம் அப்துல் மனார் மொஹம்மட், ஹம்ஸா மொஹிதீன் மொஹம்மட் இம்ரான் ஆகிய சந்தேக நபர்களைக் கைது செய்தோம். அவர்களிடமும் ஏற்கனவே நாம் பொறுப்பேற்ற சந்தேக நபர்களிடமும் முன்னெடுத்த விசாரணைகளில் சியோன் தேவாலய தற்கொலை தாரிக்கும் தாம் உதவி ஒத்தாசை புரிந்தமையை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

இந்நிலையில் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த போது, புத்தளம் வனாத்துவில்லு, லக்டோ தோட்டத்தில் உள்ள ஆயுதங்கள் தொடர்பில் தகவல் கிடைத்தது. அதன்படி சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் ஆலோசனைக்கு அமைய நாம் புத்தளம் சென்று அங்கிருந்து அதிரடிப் படை பாதுகாப்புடன் லக்டோ தோட்டம் பகுதிக்குச் சென்றோம்.

இந்நிலையில் வனாத்துவில்லு லக்டோ தோட்டத்திற்குச் சென்ற நாம், அங்கு புதைக்கப்பட்டிருந்த பீப்பாய் ஒன்றிலிருந்து ஆயுதங்களை மீட்டோம். அன்றைய தினம் மாலை 6.05 மணிக்கு லக்டோ வத்தையை அடைந்த நாம், அங்கிருந்த வீடொன்றுக்குள் பின்னர் சந்தேக நபர்களின் வழிகாட்டலுக்கு அமைய தோண்டி நீல நிற பீப்பாய் ஒன்றினை வெளியே எடுத்தோம்.

அதில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்தும் மகசின் தோட்டாக்கள் இருந்தன. அத்துடன் வவுணதீவு பொலிஸாரை கொலை செய்து விட்டு கொள்ளையடிக்கப்பட்டதாக நம்பப்படும் இரண்டாவது பொலிஸ் கைத்துப்பாக்கி அந்த பீப்பாயினுள் இருந்தது.

இதனைவிட உள்நாட்டு தயாரிப்பு கைத்துப்பாக்கிகள் 4, அரை தயாரிப்பில் இருந்த துப்பாக்கிகள், பல்வேறு தோட்டாக்கள் என பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

நிந்தவூரில் கண்டுபிடிக்கப்பட்ட கைத்துப்பாக்கியும் வனாத்துவில்லுவில் கண்டறியப்பட்ட கைத்துப்பாக்கியும் வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்களை கொலை செய்த பின்னர் கொள்ளையிடப்பட்டவை என்பது மேலதிக விசாரணைகளில் தெரியவந்தது" என சாட்சியமளித்தார். (ஜ-4)

# 95 ஆயிரத்தை நெருங்கியது பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கை 95 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தினால் ஆயிரத்து 495 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 94 ஆயிரத்து 260 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-8)

# தேடுதல் நடவடிக்கைகளில் 395 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது 395 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணி வரையிலான காலப்பகுதியிலேயே குறித்த தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த 161 பேரும் கஞ்சாவை வைத்திருந்த 76 பேரும் சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த 119 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டனர். (ஜ-8)

# இராசிபலன்

21.06.2020
ஆனி 07, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை பிற்பகல் 12.46 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.51 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை

வளவன்


**மேஷம்**
சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.


**ரிஷபம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


**மிதுனம்**
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், போசன நன்மையுண்டு.


**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.


**சிம்மம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கௌரவமான நாள்.


**கன்னி**
புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.


**துலாம்**
உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும்.


**விருச்சிகம்**
குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், வழிபட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.


**தனுசு**
நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன நன்மையுண்டு.


**மகரம்**
ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.


**கும்பம்**
சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.


**மீனம்**
தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

இன்றைய நாளைத் தனதென அமைப்பவனே இன்ப மனிதன்

# ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டை விவகாரம்

## அரசாங்கம் விளக்கம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டை விநியோகிக்கும் அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படும் கூற்றில் எந்த உண்மையும் இல்லை.

அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு இருக்கும் அந்த உரிமையை ஒருபோதும் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்க மாட்டோம் என ஊடக மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க தகவல் திணைக்களத்தினாலேயே வழங்கப்படும் ஊடக அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் அரசாங்க தகவல் திணைக்களத்தினாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் எமது எதிர்த்தரப்பினர் இதுதொடர்பாக பொய்ப் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது, ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் ஓர் அங்கமாகவே இதுவரை அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அடையாள அட்டையை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு விடுக்கும் அச்சுறுத்தலாகும் எனத் தெரிவித்திருந்தார்.

இவர்களின் இந்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. அரசாங்கத் தகவல் திணைக்களத்துக்கு இருக்கும் அதிகாரத்தை நாங்கள் யாருக்கும் வழங்கவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் அதிகாரம் ஊடக அமைச்சுக்கே இருக்கிறது.

அந்த அதிகாரத்தை ஒருபோதும் நாங்கள் பாதுகாப்பு பிரிவுக்கு வழங்க மாட்டோம். அத்துடன் அவ்வாறான கோரிக்கையினை பாதுகாப்புப் பிரிவு எமக்கு முன்வைக்கவும் இல்லை.

ஊடகவியலாளர்கள் எந்தத் தடைகளும் இன்றி தகவல்களை சேகரிப்பதற்கே குறித்த அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டுக்குள் இருந்த சந்தர்ப்பத்தில், நாடு முழுமையாக அடைக்கப்பட்டிருந்த நிலைமையிலும் தகவல்களை சேகரிப்பதற்கு பாதுகாப்பு பிரிவுடன் கலந்துரையாடி, ஊடகங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தோம்.

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை விநியோகம், ஊடக அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படும் என ஊடக மற்றும் தகவல்தொழில்நுட்ப அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-8)

# கொழும்பு துறைமுக நகர கடற்கரை பொதுமக்களுக்காக திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ள கடற்கரை அடுத்த ஆண்டு பொதுமக்களின் பாவனைக்காக திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2021 இற்குள் குறித்த திட்டத்தை முடிப்பதற்கான கட்டுமானப் பணிகளை கொழும்பு துறைமுக நகர பிறைவேட் லிமிடெட் துரிதப்படுத்தியுள்ளது என்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடற்கரை பூங்கா, குழந்தைகள் பூங்கா, படகு தரித்து நிற்கும் இட்ங்கள், உணவகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல பொழுதுபோக்கு வசதிகளுடன் 2 கி.மீ.நீளமுள்ள கடற்கரை பிரதேசம் தற்போது கட்டப்பட்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடல் அலைகளை தடுப்பதற்கு சராசரி கடல் மட்டத்திலிருந்து 4.5 மீற்றர் உயரத்தில் 3.2 கி.மீ நீளமுள்ள இடைவெளியிலான கட்டுமானப் பணிகள் ஏற்கனவே நிறைவுற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பு துறைமுக நகருக்கு வருவதற்கு பொதுமக்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படும் என்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (ஜ-4)


உங்கள் அடகு வைத்த நகையை மீட்க முடியாது போனால் அதனை மீட்டு பெறுமதியான பணத்தை நாம் தருகிறோம். (C-921)
அழையுங்கள்: 0776151283

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்
- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-3065)
ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153
வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# ஆரோக்கிய வாழ்விற்கு பயன் தரும் யோகா

சித்தர்கள் மனிதகுலம் மேன்மையுற பல அரும்பெரும் பொக்கிஷங்களை இந்த உலகிற்கு தந்து சென்றுள்ளனர். அவை இலக்கியம், வேதங்கள், தத்துவங்கள், தற்காப்புக்கலைகள், மருத்துவம் என தொடர்ந்து செல்கின்றது. அவைகளில் மனித உடலும் மனமும் உறுதியாகவும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் பன்னெடுங்காலம் நிலைத்திருக்க அவர்கள் நமக்களித்த அரும்பெரும் பொக்கிஷங்கள் தான் மருத்துவமும் யோகக் கலைகளும் ஆகும்.




சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். அதுபோல் உடல் என்ற ஒன்று இருந்தால் தான் "உலகம்" எனும் கலைக்கூடத்தில் "வாழ்க்கை" எனும் எழிலோவியத்தை தீட்டிப் பார்க்க முடியும். உடல் என்ற ஒன்று இருந்தால் மட்டும் போதாது. அதில் உறுதியும் ஆரோக்கியமும் நிலைத்திருக்க வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற இலக்கணத்திற்கு ஏற்ப நோயற்ற பெருவாழ்வு வாழ சித்தர்கள் நமக்களித்த வற்றாத இரு அருஞ் செல்வங்களே மருத்துவமும் யோகக் கலையும் ஆகும்.

நோய் வந்த பின் மருந்து தேடி ஓடுவதைவிட நோய் வராமலேயே உடலைச் சீர்படுத்திக் கொள்வது தான் சிறப்பானதும் புத்திசாலித்தனமானதுமாகும். அந்த வகையில் நோய்கள் நெருங்க முடியாத வகையில் உடலைச் செதுக்கும் திறன்படைத்த "யோகக்கலை" மருத்துவத்தைவிட ஒருபடி மேலான சிறப்பைப் பெற்று விளங்குகின்றது.

யோகா நம் அன்றாட வாழ்வில் ஓர் அங்கம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்று நாம் அவசர கதியில் வாழ்ந்து கொண்டு வருகின்றோம். நேரமில்லை என்ற நொண்டிச் சாக்கை விடுத்து நமது உடலுக்காக தினசரி அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை ஒதுக்க வேண்டும். முதலில் சற்றுத் தடுமாற்றமாக இருப்பினும் பின்னர் போகப் போக அன்றாட வாழ்க்கையில் யோகா ஓர் அங்கமாக மாறிவிடுவதை உணர்வீர்கள். குழந்தைகள் முதல் பெரியோர் வரை வயதுக்கேற்றபடி யோகாசனம் செய்வதால் நிம்மதியாக வாழ முடியும்.

'யோகம்' என்ற பதத்திற்கு "ஒருமுகப்படுத்தல்" மற்றும் இணங்கியிருத்தல் என்று பொருள் படுகின்றது. மனதையும் உடலையும் புலன்களின் பால் அலையாமல் பயிற்சியின் மூலம் ஒருமுகப்படுத்தி மனிதனின் மனத்துள் புதைந்திருக்கும் அளப்பரிய ஆற்றலை தட்டியெழுப்பி அது எவ்வாறு மனித சமுதாயத்திற்கு பயன்படும்படி செய்யலாம் என்பதைக் கற்றுத்தருவதே "யோகக் கலை" ஆகும்.

தெய்வமாகவி என்று போற்றப்படும் தமிழ்ச்சித்தர் திருமூலர் தனது திருமந்திர நூலிலே இவ்வாறு பாடுகிறார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன் உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே"

நமது உடலை இழுக்கென்றும் அழுக்கென்றும் எண்ணுவதை பேதமை என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம் உடல் ஓர் இயந்திரம் போன்றது. அதற்குத் தேவையான உணவை அளித்தால் மட்டும் போதாது. ஓய்வையும் அளித்தே ஆக வேண்டும். உணவும் சீர்கெட்ட உணவினை உட்கொண்டால் உடல் நலம் கெட்டுப் போகின்றது. உடலுக்குத் தேவையான சக்தி குறைவடைந்து செல்கிறது. ஆண்டவன் நமக்களித்த இந்த அற்புத மேனியை பேணிப் பாராட்டி நாம் வாழ வேண்டும். எனவே தான் உடல்நலம் என்பது நமது வாழ்வில் முக்கிய இடம்பெறுகின்றது.

தெய்வம் வாழுகின்ற திருக்கோயிலாக விளங்கும் நம் தேகத்தை காக்கும் சிறந்த உபாயம் என்று நமது முன்னோர்கள் மேற்கொண்ட முறை யோகா முறையான பயிற்சிகள் தேக நிறைவுக்கு யோக முறைப் பயிற்சிகள் தான் தேடி வந்து உதவும் திரண்ட செல்வமாகும். உடம்பைக் காக்கும் உபாயம் இதுதான் என்று உணர்ந்து தெளிந்த பிறகு, உபாயமாய் விளங்கும். யோகாசனப் பயிற்சி முறைகளை விரிவாக விளங்கிக் கொண்டோமானால், நாம் செல்லும் வழியில் தெளிவு இருக்கும், சேரும் வழியில் பொலிவு கிடைக்கும். செயற்கரிய செய்தோம் என்ற பெருமையுடன் சீரிய திறமையும் கிடைக்கும் என்று தெளிந்த மனதுடன் நமது வாழ்க்கைப் பயணத்தை தொடர்வோமாக!

கலாநிதி பாலசுப்பிரமணியம்
சுதாகரன்
துரை வீதி, இணுவில்

# யானைகளிடமிருந்து பாதுகாக்க பொதுமக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் காட்டு யானைகளால் வீதியில் பயணிக்கும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அண்மைய நாட்களாக முல்லைத்தீவு- மாங்குளம் பிரதான வீதியின் வனப் பகுதிகளில் காட்டு யானை வீதியால் செல்பவர்களை அச்சுறுத்தி வருகின்றது. இதேவேளை அண்மையில் குறித்த வீதியால் சென்ற வயோதிபர் ஒருவர் தாக்கப்பட்டார்.

இந் நிலையில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க மக்கள் கோரியுள்ள நிலையில் முல்லைத்தீவு மாங்குளம்-பிரதான வீதியில் பயணிக்கும் பயணிகள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்த தோடு குறித்த வீதியில் யானைகள் நிக்கும் இடங்களை கடப்பதற்கு அச்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வேலைகளுக்கு சென்று திரும்பும் பெண்கள் உள்ளிட்ட பலரும் அச்சத்தில் பயணித்துவருகின்றனர். எனவே தொடர்ச்சியான இந்த அச்சுறுத்தலை நீக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-28)

# பணம் பறிக்க முற்பட்டவர்கள் தப்பியோட்டம்

(குப்பிழான்)

வீதியால் சென்ற குடும்பஸ்தரைப் பட்டப்பகலில் ஏமாற்றிப் பணம் பறிக்க இருவர் முற்பட்ட போதிலும் குறித்த குடும்பஸ்தரின் சாதுரியத்தால் அந்த முயற்சி கைகூடவில்லை. குறித்த சம்பவம் குப்பிழான் தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் பிற்பகல் இதே பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் வீதியால் சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவர் இடைமறித்துள்ளனர். குறித்த இருவரும் பெயரொன்றைக் குறிப்பிட்டு சிங்களத்தில் விலாசம் விசாரித்ததுடன் பணம் பறிக்கவும் முற்பட்டுள்ளனர்.

நிலைமையைப் புரிந்த கொண்ட குடும்பஸ்தர் சிங்கள மொழியில் அவர்களுக்குப் பதில் வழங்கியதுடன் அவர்களின் அடையாள அட்டையைக் காட்டுமாறும் வினவியுள்ளார்.

இதனையடுத்து குறித்த இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர். (4-5-18)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 170 | 160 |
| தக்காளி | 220 | 220 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 80 |
| கோவா | 140 | 120 | 130 | 140 |
| கரட் | 120 | 160 | 170 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 50 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 280-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 200 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 | 120 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 100 | 80 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 400 |
| போஞ்சி | 200 | 150 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 80 |
| கீரை -1பிடி | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 500 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 50-60 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 270 | 160 | 120 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஜப்பலா | 60 | 60 | 50-60 | 80 |

# அனுமதியின்றி இறைச்சிக்காக மாடு வெட்டிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறைப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டிய 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 520 கிலோ கிராம் மாட்டிறைச்சி மீட்கப்பட்டுள்ளதுடன், இறைச்சிக்காக வெட்டப்பட தயாராக கட்டி வைத்திருந்த 3 மாடுகள் மற்றும் 2 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக அப்பகுதி பொதுமக்களால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து நேற்று சனிக்கிழமை காலை அங்கு மாநகர சபை ஊழியர்களுடன் சென்ற போது சுகாதார பரிசோதகர்கள் அப் பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இறைச்சி வெட்டப்படும் இடத்தினை முற்றுகையிட்ட போது 520 கிலோ கிராம் மாட்டிறைச்சி ,3 மாடுகள் மற்றும் 2 ஆடுகள் ஆகியவற்றை பொதுச் சுகாதார பரிசோதாகர்கள் மீட்டனர். (5-8)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தின் மணல் ஏல விற்பனை நாளை மறுதினம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது எனவும் ஏல விற்பனைக்கான மணலை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் எனவும் கிளிநொச்சி மாவட்ட / நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# மத்திய வங்கி தொடர்பில் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பு - காமினி



(கொழும்பு)

**ஜனாதிபதியின் செயற்பாடுகளை விமர்சிக்கும் அதிகாரம் எதிர்க்கட்சிக்கு கிடையாது. மத்திய வங்கி தொடர்பில் ஜனாதிபதி எடுத்த தீர்மானங்கள் மக்கள் மத்தியில் நல்வரவேற்பினைப் பெற்றுள்ளது. அரசியல் தேவைகளை நோக்கமாக கொண்டு செயற்பட வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு கிடையாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பணிப்புரை தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. ஜனாதிபதி அரச ஊழியர்களை அச்சுறுத்துவதாகவும் அழுத்தம் பிரயோகிப்பதாகவும் எதிர்க்கட்சியினர் பலதரப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். ஜனாதிபதியின் செயற்பாடுகளை விமர்சனத்துக்குள்ளாக்கும் உரிமை எதிர்க்கட்சியினருக்கு கிடையாது. மத்திய வங்கி தொடர்பில் ஜனாதிபதி செயற்பட்ட விதம் மக்கள் மத்தியில் வரவேற்பினை பெற்றுள்ளன. அமைச்சரவையின் பிரதானி என்ற அடிப்படையில் ஜனாதிபதி நிதி தொடர்பான தீர்மானங்களை எடுத்துள்ளார். இதில் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. பொருளாதாரம் துரிதமாக கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையினர் முன்னேற்றமடைய வேண்டும். அதற்கு மத்திய வங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனாதிபதியின் தீர்மானங்களை தற்போது மத்திய வங்கி செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

கொவிட்-19 வைரஸ்பரவலை கட்டுப்படுத்த ஜனாதிபதி முன்னெடுத்த நடவடிக்கைகளை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. ஆகவே தற்போது மக்கள் அரசியல் ரீதியில் தெளிவு பெற்றுள்ளார்கள். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் தீர்மானங்களே பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவிற்கு கிடைக்கப் பெறும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார். (ஜ-8)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பல்கலைக்கழக அனுமதி 2019/2020
### உளச்சார்புப் பரீட்சை (Aptitute Test)
### இளங்கலைமாணி மொழிபெயர்ப்புக் கற்கைநெறி (கௌரவ)
### (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கைநெறிக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் **05.07.2020 @ 11.00 PM** வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நியந்தனைகளும் தகைமைகளும்**

இளங்கலைமாணி மொழிபெயர்ப்புக் கற்கைநெறி (கௌரவ) யைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் எப் பிரிவில் தோற்றியவர்களும் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழித் திறமையைப் பரீட்சித்தல் என்ற இலக்கினை அடிப்படையாகவுள்ள பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படவுள்ளது.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளம் ஊடாகத் தமது விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் (online) விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர், விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 500.00 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை, கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (உ/த) 2019 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **05.07.2020 @ 11.00PM** மணிவரை பிரதிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்புக் கற்கைநெறி 2019/2020" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும்,விண்ணப்பமுடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் பெயர்கள் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். ஆகவே தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தத்தமது பரீட்சை அனுமதி அட்டைகள் தபால்மூலம் கிடைப்பதில் தாமதம் ஏற்படின் அவர்களுக்கு குறித தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்துக்கு சமுகமளித்து தற்காலிக அனுமதி அட்டையைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்பதைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். இவற்றிற்குரிய பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (C-9736



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### இராமநாதன் நுண்கலைக்கழகம்
### பல்கலைக்கழக அனுமதி-2019/2020
### உளச்சார்புப் பரீட்சை (Aptitute Test)

- இசையில் (கௌரவ) இளநுண்கலைமாணி
- நடனத்தில் (கௌரவ) இளநுண்கலைமாணி
- சித்திரமும் வடிவமைப்பில் (கௌரவ) இளநுண்கலைமாணி

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 10.07.2020 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நியந்தனைகளும் தகைமைகளும்**

**அனுமதிக்கான தகைமைகள்**

- சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாட நெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரண தரச்சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்

**தகுதிகாண் பரீட்சை ஆற்றுகை/உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை/உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

- சங்கீதம், நடனம் - ஆற்றுகை பரீட்சை
- சித்திரமும் வடிவமைப்பும் - எழுத்துப் பரீட்சையுடன் செய்முறை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளம் ஊடாக தமது விண்ணப்பங்களை ஒன்லைன்மூலம் **(Online)** விண்ணப்பிக்க வேண்டும்.அதன் பின்னர் விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் ரூபா 1000/= பரீட்சைக்கான கட்டணமாக செலுத்த வேண்டும்.**

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா.500 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல.162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 10.07.2020 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

(C-9737)

**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**


# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### வட மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட புராதன இடங்கள்




**"During the review in 2016 conducted by IUCN, discussions with key government agencies, district administrative authorities and plan ning units in the five Northern Province Districts revealed several important considerations towards implementing recommendations. Int roduction of the SEOs and Scenario Assessments followed by recommendations for each dev elopment project had been the core of the ISEA-North implementation at district level. District Government staff confirmed that the ISEA related information was useful and recommendations are being implemented> but at a less than optimal speed."**

இவ் உயர் அதிகாரிகள் இப் பிரச்சினைகள் பற்றி நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் கருத்து ஏதும் கூறவில்லையா? அல்லது அவர்களின் கருத்து எடுபடவில்லையா? அல்லது இதன் தாக்கத்தை அப்போது அவர்கள் உணரவில்லையா? என்பது தெரியவில்லை.

❖ .மற்றைய காரணங்கள் இவ் ஆய்வின் போது உள்நாட்டுப் போருக்கு முன் மக்கள் வாழ்ந்த இடங்கள் சரியாக அடையாளம் காணப்படாமை.

❖ மக்கள் இடம்பெயர்வால் வெறுமையாக்கப்பட்ட தனியார் மற்றும் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அரச காணிகள் எல்லாம் வெற்று நிலங்களாக அல்லது புதுக்காடுகளாக மாறியிருந்தன. அவற்றை எல்லாம் காணி உரித்துக்களை நிர்ணயிக்கும் நில அளவைத் திணைக்களம் மற்றும் காணி உரித்துக்கள் நிர்ணயத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்களின் உதவியுடன் தீர்மானம் எடுக்காமல் ஆய்வுக்குழு சுயமாக தீர்மானம் எடுத்தமை.


❖ இவ் ஆய்வின் இறுதி அறிக்கை வெளியிட முன் 2009-2014 காலகட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களை மீள் ஆய்வின்போது கவனத்தில் கொள்ளாமை.

இம்மதிப்பீட்டு செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக நெடுந்தீவில் 1,846 ஹெக்டேயர் (4,562 ஏக்கர்) பரப்பளவு கொண்ட ஒரு தேசிய பூங்காவை உருவாக்க பரிந்துரைத்தது. மே 2015 இல் ஆதாம் பாலம், சுண்டிக்குளம் மற்றும் மடு றோட் ஆகியவற்றுடன் நெடுந்தீவின் ஒரு பகுதி தேசிய பூங்காக்களாக மாற்றப்படும் என்று அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டது. நெடுந்தீவின் ஒருபகுதி 22 ஜூன் 2015 அன்று 1,846 ஹெக்டேயர் (4,562 ஏக்கர்) பரப்பளவில் ஒரு தேசிய பூங்காவாக மாறியது.

பழைய சுண்டிக்குளம் வனஜீவராசிகள் சரணாலயம் வட இலங்கையில் அமைந்துள்ளது. இது கிளிநொச்சியின் வடகிழக்கில் ஏறக்குறைய 12 **km (7 mi)** தூரத்தில் அமைந்துள்ளது. சுண்டிக்குளம் கடல் நீரேரியும் அதனைச் சுற்றிலும் காணப்பட்ட இடங்களும் பறவை வனவிலங்குகள் காப்பகம் என 25 பெப்ரவரி 1938 அன்று **Fauna and Flora Prote ction Ordin ance (No. 2) of 1937)** சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டது. இச்சரணாலயம் 19,565 **ha** (48,347 ஏக்கர்கள்) பரப்பாக விரிவாக்கப்பட்டு தேசிய வனமாக 22 ஜூன் 2015 வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டது.

### மக்கள் வசிக்கும் பகுதியான சுண்டிக்குளம், சுண்டிக்குளம் தேசிய வனமாக பிரகடனம் செய்தது சரியா, பிழையா?

இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் அதுபற்றி விடை கூறுவது கடினமாகும். ஆனால் இப் பிரகடனத்தில் உள்ள சில குறைபாடுகள் பற்றி எனது கருத்தைக்கூற விரும்புகிறேன். இதுபற்றி விளங்கிக்கொள்வதற்கு அரச காணிகள், தனியார் காணிகள் என்றால் என்ன என்பது பற்றியும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் யாருடைய காணிகளில் தேசிய வனம் பிரகடனம் செய்யலாம் என்பது பற்றியும் தெரிந்திருத்தல் அவசியமாகும்.




(தொடரும்...)




# தேவதை

மாலைப்பொழுது வானத்துக்கு மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தைக் கொடுத்து திரும்ப வாங்கிய வண்ணம் கதிரவன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் புகுந்து கொண்டிருக்கிறது.

ஆறாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் பள்ளியில் இருந்து வந்தவுடன் புத்தகப்பையை இறக்கிவிட்டு அடுப்படியில் கண்ணாடி டப்பாவில் போட்டு வைத்திருந்த பொரி கடலையை இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு தெருவின் முற்றத்தில் விளையாடப் போய் விட்டான்.

இருள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. "ஏய் கணேஷ் விளையாடியது போதும், வந்து படிடா" என்று அம்மா கூவ, ஓடி வந்தான். "போய் கை, கால் அலம்பிவிட்டு மாடி மேலே போய் படி". கணேஷ் நெடு நேரமாகமும் முரமாகப் படித்துக் கொண்டிருந் தான்.

"கணேஷ் நேரமாயிடுச்சு. சாப்பிட்டு தாத்தா கூடப் போய்ப்படு. காலையில் படிக்கலாம்" என்றாள் அம்மா. சாப்பிட்டுவிட்டு தாத்தாவுடன் படுத்தான். தூக்கம் வரவில்லை. "தாத்தா ஒர் கதை சொல்லுங்க " என்றான். பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவும் கதை கூற ஆரம்பித்தார். ஒரு ஊரிலே ஒரு ராஜா. அவர் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிந்தது. அந்த ராஜாவுக்கு மீனா என்று ஒரு ராஜகுமாரி. தேவதை போல கொள்ளை அழகு. குருகுலத்தில் நன்றாகப் பாடம் படித்தும் வீர, தீர வித்தைகளை கற்றும் இருந்தாள். அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் என்று நாட்டு மக்கள் இளவரசியைப் புகழ்ந்தார்கள்.

மீனாவுக்காகவே வனம் போன்ற அழகுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் நந்த வனம் அமைத்துக் கொடுத்தார் ராஜா. மாதம் ஒரு தடவை அரண்மனையை விட்டு வெளியே வரும் மீனா, நந்த வனம் வந்து உலவிவிட்டுப் போவாள். அந்த ஊர் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிற நேரத்தில் அந்த ஊருக்குள் ஒரு வேதாளம் புகுந்தது. அந்த வேதாளம் இரவு நேரம் ஊருக்குள் வந்து திருமணம் ஆகாத பெண்களை அடித்து இரத்தம் குடித்து கொன்று விடும். திருமணம் ஆகாத பெண்களை விட்டுவிட்டு வேறுயாரையும் தொடுவதும் இல்லை. கண்ணுக்குத் தட்டுப்படுவதும் இல்லை.

இந்த விடயம் ராஜாவுக்குத் தெரிந்து வேதாளத்தைக் கொல்ல ஆட்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப் போய் சோர்வாக இருந்தார்.

ராஜாவின் மனக் கவலையை மீனா அறிந்தாள். ஒரு நாள் ராஜகுமாரி மிகவும் தைரியமாக இரவு நேரம் அரண்மனைப் பின்பக்க வாசல் வழியாக வேதாளத்தைப் பார்க்க புறப்பட்டாள். சிறிது தூரம் போய் ஊரைக் கடந்ததும் வெள்ளிக் கொலுசை மாட்டி "ஜலக் ஜலக்" என்று சத்தம் வருகிற மாதிரி நடக்க ஆரம்பித்தாள்.

உடனே பக்கத்தில் இருக் கும் ஒரு மரத்தில் இருந்த அந்த வேதாளம் பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு அதைப் பார்த்ததும் பயமாகி விட்டது. இருந்தாலும் தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

அந்த நேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் மின்னல் தாக்கியது மாதிரி தடுமாறியது. அதேவேளையில் ராஜகுமாரி சுதாரித்தபடி. தனது இடுப்பில் இருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து இரத்தம் பீறிட்டது.

வேதாளம் சாகப்போகும் நேரத்தில் ராஜகுமாரியை கூப்பிட்டுச் சொன்னது. "தேவியாரே! நான் வேதாளம் இல்லை. பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதை சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாளம் வேஷம் போட்டு அனுப்பப்பட்டவன் நான்" என்று சொன்னான். இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவன் உயிர் பிரிந்தது. நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத் திருமகள் என்று அவளை முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள்.


"என்னடா பேரப்பிள்ளை அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நன்றாகப் படித்து வீரமாக நல்ல தைரியத்தோடு. எதற்கும் பயப்படாது இருக்க வேண்டும்" என்று தாத்தா கேட்க. "கொர் கொர்" என்ற குறட்டையுடன் கணேஷ் தூங்கிக் கொண்டிருந்தான்.

விடியற்காலை ஐந்து மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பிவிட்டார். கணேஷீம் எழுந்து முகம் கழுவி விட்டு வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான்.


"என்ன தாத்தா! இரவு நீங்கள் ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம் என்று சொன்னீர்கள். ஆனால் எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்லவில்லை?" என்று கேட்டான்.

தாத்தா கலகலவென்று சிரித்து விட்டார்.

## வரைந்து பழகுவோம்



## இங்குள்ள மிருகங்களின் கடைசி எழுத்தைக் கண்டுபிடித்து சரியாக பொருத்துங்கள்





## அரசியல் தீர்வு என்பது கெஞ்சிப் பெறுவதல்ல

# நேர்மையான-துணிவான-திடமான தலைமையை தெரிவு செய்ய

# தமிழ் மக்கள் பொதுத்தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் சிறிகாந்தா



(குப்பிழான்)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஜனாதிபதி வேட்பாளர் ஆட்சிக்கு வரக் கூடாதெனத் தீவிரமாக எதிர்த்தார்களோ அவ் வாறானதொருவர் தற்போது போரை முடிவுக்கு கொண்டு வந்த கதாநாயகனாக சிங்கள மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர் என்ற வகையில் தீர்வைத் தரக்கூடியவர் எனும் காட்சியைக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த இரட்டை நாக்கு வாதத்தைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டு இனியாவது நேர்மையான, துணிவான, திடமான நடைமுறைச் சாத்தியங்களை உணர்ந்து கொண்ட புதியதொரு தமிழ் அரசியல் தலைமையை தேர்ந்தெடுப்பதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தலை நல்லதொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த வேண்டுமென நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம் எனத் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற வேட்பாளரும், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள தமிழ்த்தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பு நீட்டியிருக்கும் நேசக்கரம் தங்கள் சொந்த நலனுக்காக மேற்கொண்டுள்ள அப்பட்டமான சந்தர்ப்பவாத நடவடிக்கை என்பதை நாங்கள் தெட்டத்தெளிவாக கூறிக் கொள்கின்றோம்.

அரசியல் தீர்வு என்பது கெஞ்சிப் பெறுவதல்ல. இரந்து பெறுவதல்ல. அரசியல் தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்தமாக ஓர் அமைதியான, பொருளாதார ரீதியில் பலமான, சுபீட்சமான இலங்கைத் தீவினை உருவாக்குவதற்கு இலங்கை நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவைப்படுகின்றது.

இந்த விடயத்தில் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் பிரதிநிதித்துவ அந்தஸ்துக் கொண்ட கட்சிகள் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் கலந்து கொள்ளக் கூடிய வகையில் ஓர் ஆக்கபூர்வமான, விரைவான அரசியல் பொறிமுறையொன்றின் மூலமாக அத்தகைய தீர்வு தொடர்பாகத் தமிழ்மக்கள் தங்கள் பங்களிப்பை வழங்க முடியும்.

இதனை விடுத்து தற்போது பதவியிலுள்ள அரசாங்கத்திற்கு அல்லது ஜனாதிபதிக்கு சந்தர்ப்பவாத அடிப்படையில் ஒத்துழைப்புக் கரம் நீட்டுவதன் ஊடாகத் தமிழ்மக்களுடைய அடிப்படை அரசியல் அபிலாசைகளை எந்த விதத்திலும் முன்னெடுக்க முடியாது.

தமிழ்மக்கள் தங்கள் மண்ணில் அளவுக்கதிகமாகப் படையினர் குவிக்கப்பட்டுள்ளமையை விரும்பவில்லை. தமிழ்மக்கள் தங்களின் மரபு வழித் தாயகத்தில் ஓர் சுயாட்சி முறையிலான அரச, அதிகார நிர்வாகப் பொறிமுறை ஊடாகத் தான் அரசியல் அபிலாசைகளை நிலைநிறுத்த முடியுமெனக் கருதுகிறார்கள்.

எனவே, இவற்றையெல்லாம் நாம் ஆட்சியாளர்களிடம் இரந்து பெற முடியாது. எங்கள் தரப்பில் திடமான, தீர்க்கமான அரசியல் நிலைப்பாடு காணப்பட வேண்டும். இதுமாத்திரமல்லாமல் சர்வதேசத்தின் பங்களிப்பும் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-18)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 15 செவ் 11 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.B.M. (HONS), Management
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10833

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 44 செவ் 7 இல் உயரம்: 162cm
தகைமை/தொழில்: Diploma தொழில் நுட்பவியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண், உத்தியோகம் இருப்பின் சிறந்தது
தொ.இ: B/10834

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 32 செவ் 12 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கலாநிதி. சிரேஷ்ட விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண் அரச உத்தியோகம் 1982 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்த பெண்
தொ.இ: B/10835

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் உத்தியோகம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10836

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 24 செவ் 5 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. சுகாதார ஊழியர் (அரச)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவர்
தொ.இ: G/10862

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி சட்டத்தரணி
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10863

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்தமருத்துவ பட்டதாரி உள்ளகப் பயிற்சியாளர். (வைத்தியசாலை)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10866

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 100 1/4 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Sc, Civil Engineer
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் அல்லது வெளிநாடு
தொ.இ: G/10867

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# கொழும்பில் விடுதிகளை திறப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்-ஜனகன்

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் பரவல் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் விடுதிகள் மூடப்பட்டிருப்பதனால் வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.



இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதுடன், உரிய சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கமைய விடுதிகளை திறப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வெள்ளவத்தையில் அமைந்துள்ள ஐ.டி.எம்.நேசன்ஸ் பல்கலைக்கழக நிறுவனத்தின் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மாவட்டத்திற்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளைச் சேர்ந்த பலரும் வருகை தருகின்றனர். வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்பு நகருக்கு அதிகமான மக்கள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில் கொவிட் - 19 வைரஸ் பரவலின் காரணமாக கொழும்பிலுள்ள விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் பேருந்துகள் அதிகாலை 2 அல்லது 3 மணியளவில் கொழும்பில் தரிக்கப்படுவதால் அதில் வருகை தரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் இந்தப் பயணிகளுக்கு தங்களது உறவினர்களின் வீடுகளுக்கு செல்லமுடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இந்நிலையில் இவர்கள் வீதிகளிலே பொழுதை கழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் எமக்கு பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்று வருகின்றன. தற்போது நாடு வழமைக்கு திரும்பியிருப்பதால் அரசாங்கம் இந்த விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்தி, உரிய சுகாதார விதிமுறைக்கமைய விடுதிகளை திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்தார். (ஜ-8)

# இந்தியக் கடற்படையினர் 25 பேர் நேற்று வருகை

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலொன்றில் பணியாற்றுவதற்காக இந்தியக் கடற்படையினர் 25 பேர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியாவின் கொச்சின் நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கி பயணித்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.1166 எனும் விமான மூடாக நேற்று முற்பகல் நாட்டை வந்தடைந்தனர்.

இதேவேளை நாட்டிற்கு வருகைதந்துள்ள இந்தியக் கடற்படையினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதனிடையே பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை குறித்த அனைவரும் அருகில் உள்ள ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# அற்புதமான சாவி ஆறாவது அறிவு!

## ஆன்மீகம்

(நேற்றைய தொடர்ச்சி)

வாகனத்தை வாகாக இயக்குவதற்குத் தான் வழங்கப்பட்டிருக்கிறது ஆறாவது அறிவு என்னும் அற்புதமான சாவி! கருவின் உருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து என்கிறது திருப்புகழ், நம்மில் பலர் வயதில் தான் வளர்கிறார்கள் என்கிறார் அருணகிரிநாதர்.

ஆளும் வளரணும்! அறிவும் வளரணும்! அது தான்டா வளர்ச்சி!என்கிறார் பட்டுக் கோட்டையான பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.

பலர் கண்டதைக் கண்ட நேரத்தில் எல்லாம் தின்று கண்ட படி உடல் கொடுக்கிறார்கள். இப்படி வளர்வதும் வளர்ச்சி தான். ஆனால் இது கிலோ கிராம் வளர்ச்சி.

சிலர் ஏதேதோ முயற்சி செய்து உயரமாக வளர்கிறார்கள். இப்படி வளர்வது சென்ரிமீற்றர் உயரமோ பௌதீக வளர்ச்சிதான்.

நாளுக்கு நாள் நம் அறிவு விரிவு பெற வேண்டும். மேல்நோக்கிய சிந்தனை மனிதர்களுக்கு வேண்டும். அதற்குத் தான் மனித உடல் வளர்ச்சியே மேல்நோக்கி அமைந்துள்ளது.

விலங்குகளின் உடல் அமைப்பை உற்று நோக்குங்கள்.

ஆடு, மாடு, புலி, சிங்கம் என எல்லாம் பக்கவாட்டில் தான் வளரும்.

மனிதன் பக்கவாட்டில் வளர்ந்து பேருந்திலோ, மின் வண்டியிலோ இருக்கையில் உட்கார்ந்தால் என்ன நடக்கும். எண்ணிப்பாருங்கள்.

மூன்றுபேர் உட்காரும் இருக்கையில் ஒருவன் தான் அமர முடியும். அகலத்தில் விரிக்கின்றன உயிரினங்கள். உயரத்தில் நிமிர்கின்றான் மனிதன்.

ஆம்! படைப்பின் ரகசியங்கள் அற்புதமானவை! அறிவின் விசித்திரங்கள் அலாதியானவை! கலண்டரின் திகதித் தாளைத் தினமும் நாம் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடலாமே தவிர காலம் நம்மை கிழித்துப் போட்டுவிடக் கூடாது.

ஆதி சங்கரர் முப்பத்திரண்டு வயதிலேயே முடிந்துபோனார். மாவீரன் அலெக்சாண்டரும், கணிதமேதை ராமானுஜரும் 33 வயதிலேயே மூச்சை நிறுத்திக் கொண்டார்கள்.

வீரத்துறவி விவேகானந்தரும் மகாகவி பாரதியும் 39 வயதிலேயே சாவை முத்தமிட்டார்கள்.

இளம் வயதிலேயே இயற்கை எய்திவிட்ட இவர்கள் சரித்திரத்தில் சாகாத சிரஞ்சீவிகளால் சந்ததமும் வாழ்கிறார்களே எப்படி? திருவள்ளுவர் தான் இதற்குத் தீர்ப்பு வழங்குகின்றார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**

**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.**

ஆகவே எத்தனை நாள் வாழ்கின்றோம் என்பது முக்கியம் அன்று எப்படி வாழ்கிறோம் என்பது தான் கேள்வி!

ஊரில் ஒரு இறுதி ஊர்வலம் நடந்து கொண்டிருக்கிறது. பலர் விசிலடிக்கவும், உத்தாடவும், பறை கொட்டவும், மலர் மாலைகளைப் பிரித்து எறியவும் என கதை முடிந்த சதைப் பிணத்தை சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். அப்போது பிணத்தின் பின்னே ஒரு மூதாட்டி அவர் சொர்க்கத்திற்குப் போகிறாரா? இல்லை நரகத்திற்குச் செல்கிறாரா என்று பார்த்து வருகிறேன் என்றாள்.

"அது எப்படி உன்னால் முடியும் பாட்டி?" என்றேன். "மிகவும் சுலபம். எல்லோரும் சேர்ந்து மகராசன், போய்விட்டான்'' என்று வருத்தப்பட்டால் அவர் சொர்க்கத்திற்குத் தான் போவார். "ஒரு வழியாக போய்ச் சேர்ந்தான் படுபாவி'' என முணுமுணுத்தால் அவருக்குக் கட்டாயம் நரகம் தான் என்றாள்!

**இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்!**

**இவர்போலயார்என்றுஊர்சொல்ல வேண்டும்!**

**அதுதான் வாழ்வாங்கு வாழ்வது!**

# இலங்கைக்கு உலகவங்கி விரைவில் நிதியுதவி

## பந்துல தகவல்



(கொழும்பு)
இலங்கைக்கு உலக வங்கியால் 56 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட்-19 காரணமாக சுகாதாரத் துறைக்கு அப்பால் பல துறைகளில் அழுத்தங்களை நாடு எதிர்கொண்டுள்ளது.

இதற்கமைய விவசாயத்துறையை மேம்படுத்தல், கல்வி முறையை மேம்படுத்தல், வீட்டிலிருந்து வேலைகளை மேற்கொள்ளும்நடைமுறை ஒன்றை மேற்கொள்ளல், இடர் முகாமைத்துவம் மற்றும் பொதுச் சேவைகளை பயன்படுத்தும் போது நோய் பரவுவதை தடுத்தல் போன்ற விடயங்களுக்கு நிதி ஒத்துழைப்பு வழங்கப்படவுள்ள தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நிதியை இவ்விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கு நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-8)

# இந்தியாவிலிருந்து 194 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)
தமிழகத்தில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இலங்கையர்கள் 150 பேர் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் சென்னை நகரில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 1026 எனும் விமானமூடாக குறித்த இலங்கையர்கள் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.


கொரோனாத் தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்றிட்டத்திற்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை இந்தியாவின் மகாராஷ்ரா மாநிலத்தில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இலங்கையர்கள் மேலும் 44 பேர் நேற்று நாட்டிற்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஆயிரம் ரூபா மாத்திரமல்ல மலையக மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களும் அவசியம்

## முத்தையா பிரபாகரன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)
பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றிபெறும். நுவரெலியா மாவட்டத்தையும் எமது அணியே கைப்பற்றும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர் முத்தையா பிரபாகரன் தெரிவித்தார்.

ஹற்றன், புளியாவத்தை நியூட்டன் தோட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வீட்டுப்பிரச்சினை என்பது பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளில் குறைந்தளவான வீடுகளே கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு நடக்குமானால் வீடுத்திட்டத்தை முடிப்பதற்கு பல ஆண்டுகள் எடுக்கலாம். எனவே தான் ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ் இவை இடம்பெற வேண்டும் என நாம் கோரிக்கை விடுத்து வருகின்றோம். அவ்வாறு நடைபெற்றால் நிச்சயம் மாற்றம் வரும்.

ஆயிரம் ரூபா மட்டுமல்ல மலையக மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களும் அவசியம். சுயதொழில் வாய்ப்பு உட்பட மேலும் பல விடயங்கள் ஊடாக வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி ஆராய வேண்டும் என தெரிவித்தார். (ஜ-4)

# "ரன்கெட்டியா" கைது

(கொழும்பு)
கொலை மற்றும் கப்பம் கோரலுடன் தொடர்புடைய குழுவொன்றின் உறுப்பினரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

கொலை மற்றும் கப்பம் கோரலுடன் தொடர்புடைய "ரன் கெட்டியா" எனப்படும் விராஜ் அனுருத்தவே இவ்வாறு ராகமையிலுள்ள மகுள்பொக்கை பகுதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபருடன் அவரது சகோதரரும் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த இருவரிடமிருந்து கைது செய்யும் போது ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரையும்பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# நயினை நாகபூஷணிக்கு இன்று 2ஆம் திருவிழா



## நின்மலர் பாதம் போற்றி

நீலக் கடலோசை
நித்தமுன் புகழ்பாட
நீண்ட வரலாறாய்
நீயிருந்து ஆட்சி செய்ய - என்
நினைவிலும் நீயிருக்க
நிதம் வந்துனை நான் வணங்க
நீங்காத்துயர் களைவாய்
நின்மலர் பாதம் தொழுமடியார்
குறை தீர்த்தருள் தருவாய்
நயினை நாயகியே போற்றி, போற்றி.

எஸ்.சிந்துஜா

## அடிபணிகின்றோம் நின்பாதந்தனை...

வெள்ளை யுள்ளம் கொண்டு
வேற்றுமைகள் களைந்து
நயினையில் வீற்றிருந்து
நல்லாட்சி புரியும்
நாகபூஷணித்தாயே...
கொள்ளை கொண்ட
கொரோனாவால்
எல்லையிலாத்துன்பமம்மா...
அகிலந்தோறும் அழுகுரல்கள்
அடுக்கடுக்காய் அவலங்கள்...
நீண்டு போகும் சோகங்கள்
துன்பம் போக்கும் சுந்தரியே
சுகங்கள் தந்திடம்மா
அகிலாண்டேஸ்வரித்தாயே
அடிபணிகின்றோம்
நின்பாதமம்மா...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

## நயினை நாகபூஷணி அம்மன் திருவடிக்கு மனம் நிறை தாயே நாகம்மா

கலை வளர் நயினைப் பதியினிலே
கருணை செய்வாயே நாகம்மா
அலை கடல் தாண்டி வருமடியார்
அவலம் நீக்கும் தாயம்மா
நிலை பெறு சக்தி நீயம்மா
நிதமும் காக்கும் தாயம்மா
மலை வளர் காதலிப் பெண் உமையே
மனம் நிறை தாயே நாகம்மா

கௌரி விக்னராஜேஸ்வரன்
நயினைச் செல்வி.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் றிசாத் பதியுதீனிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் நேற்று முன்தினம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 7 மணி நேர வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

நேற்று முன்தினம் முற்பகல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஆணைக்குழு முன் ஆஜரான றிசாத் பதியுதீனிடம் நேற்று முன்தினம் மாலை வரை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இதன்போது தமக்கோ அல்லது தமது குடும்பத்துக்கோ உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பில்லை என்பதற்கான ஆதாரங்களை ஆணைக்குழுவில் முன்வைத்ததாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளுள் ஒருவரான இன்சாப் இப்ராஹிம் தமது சகோதரருடனும் என்னுடனும் இதற்கு முன்னர் முரண்பட்டிருந்தார். தொழில் ரீதியாக ஆறு தடவைகள் எனது சகோதரரை இன்சாப் இப்ராஹிம் தொடர்பு கொண்டமைக்காக அவரை தடுத்து வைத்திருந்த போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளுடன் 600 மற்றும் 250 தடவைகள் கதைத்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



எனவே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே எனது சகோதரர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஞானசார தேரர் தொடர்ச்சியாக இஸ்லாமிய அமைப்புக்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமையினால் குறித்த அமைப்புக்களையும் அழைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (ஜ-8)

# நிதி நிறுவனங்களுக்கு எதிரான தகவல்களை பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களைச் சீர் குலைக்கும் நோக்கத்துடன் போலியான தகவல்களைப் பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.ஈ.லக்ஷ்மனை மேற்கோள் காட்டி சிங்கள நாளிதழொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அத்துடன், பொதுமக்களின் வைப்புகளைப் பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒரு சில நிறுவனங்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் ஏனைய வங்கி சாரா நிதி நிறுவனங்களும் தோல்வியடைந்துள்ளதாக அர்த்தப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (ஜ-8)

# இ.தொ.கா-இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(கண்டி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் குழுவினர், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்தனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த சந்திப்பில் மலையக மக்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், முன்னாள் மாகாண அமைச்சர் மருதபாண்டி இராமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரசியல் அமைப்பு பேரவை கூடவுள்ளது

(கொழும்பு)

அரசியல் அமைப்பு பேரவை எதிர்வரும் 24 ஆம் திகதி முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. பேரவையில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கான நியமனம் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையிலான அரசியல் அமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இரா.சம்பந்தன், மகிந்த சமரசிங்க, தலதா அத்துகோரள,பிமல் ரத்னாயக்க மற்றும் சட்டத்தரணிகள் இருவர் அரசியல் அமைப்பு பேரவையில் அங்கத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சுற்றுச் சூழல்

இதுவரைக்கும் நாம் அடிக்கடி கவலைப்பட்டது மனிதனிடம் இருந்து மனிதனைக் காப்பாற்றுவது எப்படி என்பதற்காகத்தான்!

ஆனால் இனிமேல் அதைவிட பெரிய கவலை ஒன்று வந்துவிட்டது. அது என்னவென்றால்.

மனிதனிடம் இருந்து பூமியைக் காப்பாற்றுவது எப்படி? இதுதான் இன்றைக்குப் பெரிய கவலை.மனிதனுக்குக் கோபம் வந்தால் சூடா ஆகிவிட்டான் என்று சொல்வது உண்டு.

இப்பொழுது பூமிக்குக் கோபம் வந்துவிட்டது...அது சூடாகிக் கொண்டிருக்கு. பூமிக்கு கோபத்தை உண்டாக்கியது யார் மனிதன் தான். இன்னும் 25 வருடத்திலே பூமியின் உஷ்ணம் சராசரி 1 முதல் 2 டிகிரி வரைக்கும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளிலே 6 டிகிரி வரைக்கும் கூட அதிகம் ஆகலாமாம்.

சரி... ஆகிவிட்டுப் போகின்றது... அதனாலே நமக்கென்ன? என்று இருந்து விட முடியாது. அதனால் பல பாதக விளைவுகள் ஏற்படும். உதாரணத்துக்கு ஒன்று பார்ப்போம்.

பூமியுடைய வெப்பம் அதிகரிக்கும் போது வட துருவம், தென்துருவம் இங்கேயெல்லாம் இருக்கிற பிரமாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனாலே கடல் மட்டம் உயரும். பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிடும். உலகம் பூராக கடல் ஓரப் பகுதிகள் மூழ்கும். அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் வேறு இடம் பார்க்க வேண்டியது தான்.

உதாரணத்துக்கு கடல் மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் வங்கதேசத்திலே 4 இலேயிருந்து 8 கோடி மக்கள் வேறு இடம் தேட வேண்டியிருக்கும். சரி... பூமி கோபப்படும் அளவுக்கு மனிதன் செய்த தவறுதான் என்ன?

இயற்கையின் சமநிலையைக் கெடுத்துவிட்டான்.

நாம் பிராண வாயுவை எடுத்துக் கொண்டு காபனீரொட்சைட்டை வெளியிலே விடுகிறோம். இந்த காபனீரொட்சைட்டை மரம், செடி, கொடியெல்லாம் எடுத்துக் கொண்டு பிராணவாயுவை வெளியிலே விடுகிறது...

இது ஒழுங்காக நடந்து கொண்டிருந்தால் சரி...ஆனால் காடுகளை மனிதன் அழிக்க ஆரம்பித்தான். காபனீரொட்சைட் சேர்ந்து போய்விட்டது. அதையெல்லாம் மாற்றிக் கொடுகிறது யார்? இதைத் தவிர வாகனங்கள், தொழிற்சாலைகள் விடுகிற புகை வேறு காற்றிலே கலக்குது.

சூரியன் உமிழும் அல்ட்ரா வயலட் கதிர்களிடம் இருந்து உயிரினங்களை பாதுகாக்கிற கேடயம் ஓசோன் படலம். இது தேய்ந்து கொண்டு வருகிறது.

C.F.C. என்று சொல்கிறாங்களே குளோரோபுளோரோ கார்பன். இந்த ரக இரசாயனத்தை ரெப்ரிஸ்ரேட்டர் ஏர்கண்டிஷனர் தீயணைப்புக் கருவிகள் இதிலேயெல்லாம் குளிர்ச்சியை ஏற்படுத்துவதற்காக உபயோகப்படுத்துகின்றோம். இதுதான் ஓசோனுக்கு எமன். C.F.C. ஒரு மாலிக்யூல் ஒரு இலட்சம் ஓசோன் மாலிக்யூலை அழிக்கக் கூடியதாம்.

இதற்கு மாற்றுப் பொருள் கண்டு பிடிக்க வேண்டும்.

இயற்கையோடு அனுசரித்துப் போக வேண்டியதன் அவசியத்தை இப்போது தான் தீவிரமாக உணர ஆரம்பித்திருக்கின்றோம்.

இந்த உலகத்திலே மரம் , செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் சௌக்கியமாக இருந்தால் தான் நாமும் சௌக்கியமாக இருக்க முடியும். எங்கள் நாட்டிலே குஜராத் வட பகுதியிலே ஆரவல்லிக்குன்று சரிவின் மையத்திலே மிருகங்கள், பறவைகள், மிருகங்கள் ,சிற்பங்கள் தான் இருக்கு. கர்ப்பக் கிரகத்திலேயும் அதே சிலைகள் தான். அங்கே வணங்கப்படும் தெய்வங்கள் பறவைகளும் விலங்குகளும் தான்.

தெய்வீகக் கதைகளிலேயெல்லாம் தெய்வங்கள் மிருகங்களையும் பறவைகளையும் வாகனமாக வைத்திருக்கிறது என்று சொல்வது எல்லாம் எதுக்காக? அதனுடைய மதிப்பை புரிந்து கொள்வதற்காகத்தான்.

அசோக மன்னன் வீதியோரத்திலே எல்லாம் மரங்கள் நட்டான் என்று சரித்திரத்திலே படிக்கிறோமே, அவர் என்ன விபரம் தெரியாமலா செய்தார்? மிருகங்களுக்கும் வைத்தியசாலைகள் நிறுவினார் அசோகர் என்றும் படிக்கிறோமே.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட நூல் நீதிசாரம். அது ஓலைச் சுவடியா இருக்கு. தமிழ் நாடு தொல்லியல் துறை தர்மபுரியிலே அதை கண்டு பிடித்து எடுத்திருக்கு.அதிலே என்ன எழுதியிருக்கு தெரியுமா?

மரம் வளர்த்தால் நரகம் இல்லை என்று எழுதி இருக்கு.

அந்த அளவுக்கு அப்பவே தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆல்,அரசு, வேம்பு இந்த மரங்களையெல்லாம் தெய்வமாக நினைத்து வழிபடுகின்ற பழக்கம் இப்போதுகூட உண்டு. இருந்தும் என்ன பிரயோசனம்? உலகச் சுற்றுச் சூழல் மிகவும் கெட்டுப் போய்விட்டதாம்.

இனிமேல் எல்லாம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயற்கையின் படைப்புக்களை அழிக்கிறதுக்கு முயற்சி செய்யக் கூடாது. சிலபேர் எதுவும் கவலைப்படுவதில்லை. மிகவும் அலட்சியம். அலுவலக நண்பர் ஒருத்தரிடம் நான் சீரியசாகச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இப்படியே போய்க் கொண்டிருந்தால்... ஒரு நாள் பெரிய பிரளயமே வந்து விடும். கடல் கொந்தளிக்கும். சூறாவளி வீசும்.. எரிமலை வெடிக்கும்... பூகம்பம் வரும்...! என்றேன்.

அவர் மிகவும் சாவகாசமாக என்னைப் பார்த்து,

“ அன்றைக்கு அலுவலகம் லீவு விடுவார்களா சேர்? என்கிறார்.

உயர்ந்த குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து அதை நோக்கி முழு ஈடுபாட்டுடன் உழைக்கத் தொடங்குங்கள்.
~ *சின்மயானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் இனிய தமிழ் மக்களே! ஒரு கணம் திரும்பிப் பாருங்கள்

*எழுதப்படாத கணக்கும் உழுது விளைவிக்கப்படாத பயிரும் ஒன்றுக்கும் உதவாவது* என்றார் மகாத்மா காந்தி.

இவை மட்டும்தானா என்றால் இல்லை. தமக்கான அரசியல் பிரதிநிதிகளாக யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பில் எந்தக் கருசனையும் இல்லாமல்; தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று எழுந்தமானமாக வாக்களிக்கும் செயலும் ஒன்றுக்கும் உதவாததே.

எனவே பட்டமரத்துக்குத் தண்ணீர் இறைப்பதுபோல எங்கள் செயல் அமைந்து விடக்கூடாது.

ஆகையால் அன்புக்குரிய தமிழ் மக்களே! எதிர்வரும் ஒகஸ்ட் 5ஆம் திகதி பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தை நீங்கள் எடுப்பதற்காக, தேர்தல் களம் நோக்கி உங்கள் பார்வையைச் செலுத்துங்கள் என்பதுதான் எம் தயவான கோரிக்கை.

தேர்தல் பிரசாரங்கள், சுவரொட்டிகள், ஊடக அறிக்கைகள், ஒருவரை ஒருவர் விமர்சிக்கின்ற பாங்குகள், எப்படியும் எம்.பியாகி விட வேண்டும் என்பதற்காகக் குத்தி முறியும் நடிப்புகள், கழுத்தறுப்புப் போட்டிகள், ஒரு கட்சிக்குள்ளேயே நடக்கின்ற குத்துவெட்டுக்கள் இவற்றையெல்லாம் எம் இனிய தமிழ் மக்கள் திரும்பிப் பார்க்க வேண்டும்.

அதிலும் 2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ் அரசியல் களத்தில் முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் உள்ளகக் கழுத்தறுப்புக்கள் நடைபெறுவதானது, எங்கள் எதிர்காலத்தை எங்கு கொண்டு போய் விடப் போகிறதோ என்று ஏங்க வைக்கிறது.

தவிர, தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப போற்றுவதும் தூற்றுவதுமான புனைவுகள் என அறம் மீறிய கருமங்கள் கண்டபாட்டில் நடக்கின்றன.

இவை ஒருபுறமென்றால், முடிந்தளவில் மக்களுக்கு உண்மையைச் சொல்லுவோம். மக்கள் விரும்பினால் எங்களுக்கு வாக்களிக்கட்டும். மக்கள் என்ற நீதி ஆயம் த்ரும் தீர்ப்பை மகேசன் தீர்ப்பென ஏற்றுக் கொள்வோம் என்றிருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளும் உண்டு.

எது எவ்வாறாயினும் யார் எப்படி என்பது பற்றியெல்லாம் தமிழ் மக்கள் அறிந்து தமது வாக்குகளை வழங்குவதற்காக தேர்தல் களத்தை உற்று அவதானிப்பது மிக மிக அவசியமாகும்.

இவ்வாறான உற்று நோக்கல் தமிழ் மக்களுக்கு தக்க அரசியல் தலைமையை தந்தாகும்.

# கல்கிஸை செயற்கை கடற்கரை விவகாரம்; விசாரணைக்கு உத்தரவிடுமாறுகோரி மனு

(களுத்துறை)

களுததுறை - கெலிடோ கடற்கரை மற்றும் கல்கிஸை கடற்கரைக்கு இடைப்பட்ட கரையோர பிரதேசத்தில் செயற்கை கடற்கரையை அமைக்கும் பணியின் ஒரு அங்கமாக, கல்கிஸை பகுதியில் கரையோரத்தில் மணல் நிரப்பப்பட்டு அவை கடல் அலைகளால் அள்ளுண்டு செல்லப்பட்டிருந்தன.

இந்நிலையில், எந்த மதிப்பீடுகளும் அற்ற குறித்த செயற்றிட்டம் தொடர்பில், மத்திய சுகாதார அதிகார சபை மற்றும் சுற்றாடல் அமைச்சூடாக முறையான விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரீட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ள நிலையில், அம்மனுவில் பிரதிவாதிகளாக கரையோர பாதுகாப்புத் திணைக்களம, மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த செயற்கை கடற்கரையை அமைக்கும்பணிகளுக்கான மணல் நிரப்பும்நடவடிக்கைகள், தேசிய சுற்றாடல் சட்டம், கரையோர பாதுகாப்பு சட்டம், உள்ளிட்ட சட்ட திட்டங்களுக்கு அமைவாக இடம் பெற்றுள்ளனவா என விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என குறித்த மனுவில் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக 2 கிலோமீற்றர் நீளம் மற்றும் 25 மீற்றர் அகலம் கொண்ட செயற்கை கடற்கரை உருவாக்கப்படவுள்ளதுடன், இதற்காக 3 இலட்சம் கன மீற்றர் மணல் பயன்படுத்தப்படவுள்ளது. அத்துடன் சுமார் 890 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் சந்திப்பு

(சாவகச்சேரி)

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்கும் சாவகச்சேரி தமிழரசுக் கட்சியின் கிளையினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி கிளையின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான கே. சயந்தன் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களான மாவை. சேனாதிராஜா, சிறீதரன், சுமந்திரன, சசிகலா ரவிராஜ், தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-5-312)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் அனைத்துத் தொண்டராசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை 22 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி NEC கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டராசியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண தொண்டராசிரியா சங்கத் தலைவர் எஸ். சதீஸ அறிவித்துள்ளார். (4-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** மாசார் சோரன்பற்று, கரந்தை, இயக்கச்சி, மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார் குளம, கோவில்வயல், இயக்கச்சி, இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளத்திலிருந்து உளுக்குளம் வரை, கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், பொன்னாவரசங்குளம், நொச்சிக்குளம், அறுகம்புல்வெளி, நெளுக்குளம் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இரா ணுவ முகாம், பயலொக்தொலைதொடர்புநிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், மாலுவாடி, New Silk Road Aquatic Company PVT (Ltd), சீனத்துறை முகம், வங்காலை ஒருபகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 18 மாவட்டங்களுக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிட்டு நிறைவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான 18 மாவட்டங்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளது.

அச்சிடப்பட்ட 10 மாவட்டங்களுக்குரிய வாக்காளர் அட்டைகள்தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, நுவரெலியா, மாத்தறை, அநுராதபுரம், பொலநறுவை, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.


பதுளை மாவட்டத்திற்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணி இன்றுடன் நிறைவடையும்.

பொதுத்தேர்தலுக்காக ஒரு கோடியே 70 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்படவுள்ளதாக அரச அச்சுகர்கங்கானிலிய னகே தெரிவித்துள்ளார். (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்க்கை என்பது ஒரு சுமை; அதைத் தாங்கிக் கொள். அது ஒரு முள் கிரீடம்; அதை அணிந்து கொள். இந்தத் துணிச்சலே அழகான வாழ்வின் அத்திபாரம்.
-அப்ராம் ரியான்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு தரும் அழியாத் உணவுக்காகவே உழையுங்கள்.
- ❖ இறைவனுக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து, இறைவனின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.
- ❖ நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே! சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர், எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்.
- ❖ வைகறையில் விழித்தெழுந்து நள்ளிரவில் ஓய்வெடுக்கும் வரை மானிடர் தம் உணவுக்காக வருந்தி உழைப்பது வீணே.
- ❖ நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய். நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில் எவரும் செயல் புரிவதுமில்லை, சிந்தனை செய்வதுமில்லை.
- ❖ உங்களுள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி, எல்லாருக்கும், எப்பொழுதும், நன்மை செய்யவே நாடுங்கள்.
- ❖ நம்பிக்கை இல்லாத தீய உள்ளம், கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்கள் எவருக்கும் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

# கொரோனா தடுப்பூசி இந்த ஆண்டே வந்துவிடும் உலக சுகாதார நிறுவனம் நம்பிக்கைத் தகவல்

(ஜெனிவா)

கொரோனா தடுப்பூசி இந்த ஆண்டே வந்து விடும் என்றும் அடுத்த ஆண்டில் 200 கோடி டோஸ் தயாராகி விடும் என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவிப்பால் புதிய நம்பிக்கை பிறந்துள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசி எப்போது வரும் என்றுதான் இந்த பூமிப்பந்தில் வாழுகிற சுமார் 750 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக அமைந்து இருக்கிறது.


அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. 6 மாத காலத்திலேயே இந்த வைரஸ் உலகமெங்கும் 85 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு பரவி விட்டது. 4.5 இலட்சத்துக்கும் அதிகமானோரை உயிரிழக்க வைத்திருக்கிறது.

உலகமெங்கும் உள்ள விஞ்ஞானிகள் 200இற்கும் மேற்பட்ட தடுப்பூசிகளை கண்டுபிடித்து, அவற்றை சோதித்துப்பார்க்கும் பணியில் தீவிரமாக இறங்கி இருக்கிறார்கள். இந்த 200தடுப்பூசிகளில் சுமார் 10 தடுப்பூசிகள் ஆரம்பகட்ட பரிசோதனைகள் முடிந்து, மனிதர்களுக்கு செலுத்தி சோதித்துப்பார்க்கிற நிலைக்கு வந்து விட்டது.

நாம் அதிர்ஷ்டசாலிகள் என்றால், இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக ஒன்றல்லது இரண்டு வெற்றிகரமான தடுப்பூசிகள் வந்து விடும்.

ரஷ்யாவில் தடுப்பூசி கண்டுபிடித்து 18 பேருக்கு செலுத்தப்பட்டுவிட்டது. அது அவர்களுக்கு பக்க விளைவுகளையோ, அவர்களது உடல் நலத்தில் பாதிப்பையோ ஏற்படுத்தியதாக தகவல் இல்லை.

அடுத்து ஜேர்மனியில் கியூர்வேக் நிறுவனமும் மனிதர்களுக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்திப்பார்க்க தயாராகி வருகிறது. ஆரோக்கியமான 168 பேருக்கு இந்த நிறுவனம், தனது தடுப்பூசியை செலுத்தப்போகிறது. செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில் இந்த தடுப்பூசியை ஆயிரக்கணக்கானோருக்கு செலுத்தி சோதிப்பார்கள்.




எனவே இந்த ஆண்டுக்குள் இதில் நல்ல முடிவை கண்டுவிட முடியும் என்று கியூர்வேக் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்து இருக்கிறது.

எனவே தடுப்பூசி இந்த ஆண்டுக்குள் வந்து விடும், கொரோனாவை ஒழித்துக்கட்டும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை என்ற நம்பிக்கை வெளிச்சம் பிரகாசமாக இருக்கிறது. (2)

# இந்தியாவிற்கு போர் விமானங்களை வழங்க ரஷ்யா முடிவு



இந்தியாவுக்கு தேவையான போர் விமானங்களை வழங்குவதற்கு ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

இதன்படி 12 சுகோய் விமானங்களும் 21 மிக் ரக விமானங்களை வழங்கத் தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

விமானங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் அவை விரைவில் இந்திய விமானப் படையுடன் இணைக்கப்படும் என்றும் ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

சீனாவுடன் எல்லையில் ஏற்பட்ட பதற்றமான சூழலையடுத்து இந்தியா -ரஷ்யா இடையிலான விமான போர் ஒப்பந்தத்தின் படி 33 போர் விமானங்கள் இந்திய விமானப் படையில் சேர்க்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (2)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கருத்துக் கணிப்பில் ட்ரம்பிற்கு பின்னடைவு

(வோஷிங்டன்)

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் மக்களின் ஆதரவு யாருக்கு என்பது குறித்து நடந்த கருத்துக் கணிப்பில் ட்ரம்புக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.



அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதியிடம் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோபிடன் களமிறங்கியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஆதரவு யாருக்கு என்பது குறித்து தொடர்ந்து கருத்து கணிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் ட்ரம்பை விட ஜோபிடன் 8 புள்ளிகள் அதிகம் பெற்று முன்னிலையில் உள்ளார். அதேபோல் கொரோனோ வைரஸை கையாண்ட விதம், வேலை இழப்பு, பொருளாதார சரிவு உள்ளிட்ட விவகாரங்களில் ட்ரம்பின் தலைமைக்கு எதிராக 55 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர். (2)

## ஐ.நா.பாதுகாப்புச் சபை தேர்தல்

# வெற்றி பெற்றது இந்தியா வாழ்த்து தெரிவிக்காத சீனா

(பீஜிங்)

ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாக சீனா தெரிவித்தது.

இந்தியா, மெக்சிக்கோ, அயர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டன. ஜேர்மனி, நோர்வே, உக்ரேய்ன் போன்ற நாடுகள் இந்தியாவுக்கு வாழ்த்து தெரிவித்தாலும், சீனா இந்தியாவுக்கு வாழ்த்து தெரிவிக்கவில்லை. சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இந்தியாவின் பெயரை குறிப்பிடவில்லை.

இந்தியா-சீனா இராணுவ பதற்றங்களின் தற்போதைய சூழ்நிலைக்கு மத்தியில் மொத்தம் 192 ஐ.நா. உறுப்பினர்களில் 184 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் இந்தியா தேர்வானது.

இதற்கு வாழ்த்து தெரிவித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியான் பேசினார். அப்போது அவர் இந்தியாவின் பெயரை குறிப்பிடவில்லை.

இந்தியாவின் வெற்றி மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவின் ஆதரவு குறித்து கேட்டபோது, நிரந்தர உறுப்பினர் என்ற முறையில் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் விரும்புவதாக தெரிவித்தார்.

'ஒரு நிரந்தர உறுப்பினராக, ஐ.நா. சாசனத்தால் வழங்கப்பட்ட பொறுப்பை கூட்டாக நிறைவேற்ற புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிரந்தரமற்ற உறுப்பினர்கள் உட்பட பாதுகாப்பு கவுன்சிலின் அனைத்து தரப்பினருடனும் ஒத்துழைப்பை அதிகரிக்க சீனா விரும்புகிறது' என்றும் அவர் கூறினார்.

மற்ற நான்கு நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தியாவின் உறுப்புரிமையை ஆதரித்த போதிலும், ஐ.நா.வின் சக்திவாய்ந்த அமைப்பில் உறுப்பினராவதற்கான இந்தியாவின் முயற்சிகளை சீனா பல ஆண்டுகளாக எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரேஸிலில் வைரஸ் தொற்று 1 மில்லியன் பேர் பாதிப்பு

(றியோடி ஜெனிரோ)

மோசமான பொருளாதாரத்தை கொண்டுள்ள பிரேஸில் நாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி கொரோனா வைரஸ் தாக்கத்தினால் சுமார் 1 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 50 ஆயிரம் இறப்புகளும் பதிவாகியுள்ளது.

பிரேஸிலில் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலா வது நோயாளி அடையாளம் காணப்பட்டார்.

இந்நிலையில் தற்போது பாதிக்கப்பட்டோர் மற்றும் இறப்புகள் இரண்டிலும் பிரேஸில் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உள்ளது.

அந்தவகையில் பிரேஸில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 10 இலட்சத்து 38 ஆயிரத்து 568 பேர் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 1,206 புதிய இறப்புகளுடன் மொத்த இறப்புக்கள் 49 ஆயிரத்து 90 ஆகக் கொண்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (2)



## நயினாதீவு...

தற்போதைய கொரோனாத் தொற்று நிலை காரணமாக ஆலய சிவாச்சாரியார்கள், நிர்வாகத்தினருடன் நயினாதீவு பகுதியைச் சேர்ந்த சில அடியவர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர்.

கொடியேற்ற உற்சவத்தைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா இடம்பெற்றது. இதன் போது சுகாதாரக் கட்டுப்பாடுகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் நயினாதீவுக்கு வெளியில் வதியும் அடியவர்கள் கலந்து கொள்ளவில்லை. (ம-3,18)

## நெருப்பு வளைய...

கிரகணம் இன்று ஞாயிற்றுக்கிழமை நிகழவுள்ளது.

இதன்போது இலங்கையர்களினால் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இன்று முற்பகல் 9.15 தொடக்கம் பிற்பகல் 3.04 வரை சூரிய கிரகணம் நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று முற்பகல் 10.20 அளவில் சூரியகிரகணத்தை பகுதியளவில் கொழும்பு நகரில் பார்வையிட முடியும் எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன ஜயரட்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முற்பகல் 10.24 முதல் யாழ்ப்பாணத்திலும் முற்பகல் 10.34 முதல் மாத்தறையிலும் சூரியகிரகணத்தை பகுதியளவில் பார்வையிட முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

## காணாமல் ஆக்...

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தம் முடிவடைந்து வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், யுத்த காலங்களில் வெள்ளை வான்களில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என பல தரப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனிப்பு போராட்டமானது இன்று (நேற்று) ஆயிரத்து 200ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

இந்நிலையில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் உரிய பதிலை வழங்குமாறு பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த போதும் இதற்கான எந்த வித தீர்வுகளும் இல்லாத நிலையில் தங்களுடைய தொடர் போராட்டத்தை ஆயிரத்து 200வது நாளாக முன்னெடுத்து வருகின்ற உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தொடர் போராட்டம் இடம்பெறுகின்ற கொட்டகைக்கு முன்பாக நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சமூக இடைவெளி பேணி முகக்கவசம் அணிந்து தங்களுடைய நியாயமான கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த உறவுகள் கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணை வேண்டும். அப்பா எங்கே என்று கேட்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அரசின் பதில் என்ன? போரின் முடிவில் கையளித்தோர் போரில் இறந்தனர் என்பது பொய் இல்லையா? சர்வதேசமே இலங்கையை குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் எங்கே உறவுகள் எங்கே? வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும். வேண்டும் வேண்டும் நீதி வேண்டும் என பல்வேறு கோசங்களை எழுப்பியவாறும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ம-3,281)

## இராணுவம் சூடு...

சேர்ந்த திரவியம் இராமகிருஸ்ணன் (வயது - 24) என்ற இளைஞனின் தலையில் துப்பாக்கிச் சூடு பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த இளைஞனின்சடலம்பளை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3,60,114)

## ஏ9 வீதியை...

கண்டித்து மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முகமாலையில் ஏ9 வீதியை மக்கள் முற்றுகையிட்டு, போக்குவரத்தை தடை செய்து நேற்று இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3,60,114)

## 71ஆவது பிறந்த...

பிறந்தநாளைக் கொண்டாடினார்.

ஜனாதிபதி நேற்றுக் காலை அநுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க ருவன்வெலிசாய அருகில் விளக்கேற்றி, பால் ஆகார பூஜை செய்தார். சங்கைக் குரிய உடுவே தம்மாலோக்க தேரர் மத வழிபாடுகளை நடத்தி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து புனித ஸ்தலத்திற்கு கப்புறுக் பூஜை நடத்தியதுடன், தாது கோபுரத்திற்கு பால் அபிஷேகம் நடத்தி வழிபாட்டிலும் ஜனாதிபதி ஈடுபட்டார்.

ருவன்வெலி சேயவிலிருக்கும் துட்டகைமுனு அரசர் மற்றும் விஹாரமா தேவி உருவச் சிலைகளுக்கு ஜனாதிபதி மலர் மாலை அணிவித்தார்.

புனித ஸ்தலத்தில் இருக்கும் பௌத்த மண்டபம் மற்றும் தேவாலயத்திற்கு சென்ற ஜனாதிபதி, மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்.

மகாசங்கத்தினருக்காக காலை அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ம-3)

## கொடிகாமத்தில்...

உயிரிழந்தவர்களின் சடலங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,18,30,60,114)

## ஹெரோயினுடன்...

கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் போதைப் பொருட்களுடன் நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து,

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொம்மைவெளி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## மூவாயிரம்...

முதல் மூவாயிரம் வரையிலான இராணுவத்தை கொன்றொழித்தேன் என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

கருணாவின் இச்சர்ச்சைப் பேச்சுக்கு எதிராக தென்னிலங்கையில் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனையிறவில் 24 மணி நேரத்துக்குள் 2 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர் என கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

இந்நிலையில், இதுகுறித்து விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

கருணா அம்மான் முன்வைத்துள்ள கருத்துக்கள் பாரதூரமானதாகும். 2000 - 3000 இராணுவ வீரர்களை கொன்றதாகக் கூறுவது நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு முரணானதாகும்.

எனவே அவரை மனிதக் கொலையுடன் தொடர்புபட்ட சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும். இதற்கான நேரடி நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்த சுததிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

தாம் கொன்ற படையினரின் எண்ணிக்கையைக் கூறிப் பெருமையடைவது தான் கருணா அம்மான் ஜனாதிபதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறும் முறையா என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து டுவிட்டரில் பதிவொன்றிட்டுள்ள அவர், "இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஜனாதிபதி அவர்களே. எத்தனை படையினரை தாம் கொன்றோம் என்று கூறி, அதுகுறித்துப் பெருமையடைவதுதான் ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கருணா அம்மான் வாழ்த்துத் தெரிவிக்கின்ற முறையா?" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கொரோனா...

தளவு அதிகமானவர்கள் தொற்றிற்குள்ளான முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொரோனா பரவலில் புதிய அபாயகரமான கட்டத்தில் இருக்கிறோம் என உலக சுகாதார அமைப்பின் (WHO) இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, தெற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தான் அதிக பாதிப்பு இருந்து வருகிறது. நாம் தற்போது புதியதும் அபாயகரமானதுமான கட்டத்தில் இருக்கிறோம். கொரோனா இப்போதும் அதி வேகமாகவே பரவிக் கொண்டிருக்கிறது. ஆகையால் முகக்கவசம் அணிவது, சமூக விலகலை கடைபிடிப்பது, கை கழுவுதல் ஆகியவை தற்போதும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்குதல் தொடர்பாக உலக நாடுகள் அனைத்தும் மிக மிக கவனமானவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிப்பது என்பது கடினமான பயணமாக இருக்கிறது என தெரிவித்துள்ளார். (ம-3)

## உறவுகளை அச்சு...

இவ்வாறு கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களை அரச புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் கைத்தொலைபேசிகளில் புகைப்படம், மற்றும் காணொளிகளை எடுத்து அச்சுறுத்தியிருந்தனர். (ம-3)


**ஜாதிக சம்பத**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 2020.06.20 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1030 |

ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 2 3 8 9 4 9

தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 20/06/2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 529 |

A 19 — வெற்றி இலக்கங்கள்: 32 35 75 76

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 20-06-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2454 |

ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 01 60 61 77

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 2020/06/20 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4160 |

ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 5 5 8 4 8 2

தேசிய லொத்தர் சபை

**ராசி அதிர்ஷ்டம்**

| வெற்றி வாரம் | வர்ணம் | திகதி |
|---|---|---|
| 2837 | இளம் நீலம் | 20.06.2020 |

வெற்றி இலக்கங்கள்: 10 28 32 62 — கடகம்

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,415,758

தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**அத கோடிபதி** ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 956 — வர்ணம்: மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி: 2020.06.20

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,907,095/-

வெற்றி இலக்கங்கள்: 24 35 41 58 — ஆங்கில எழுத்து: Z

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

சீட்டிழுப்பு இல.: 3327 — திகதி: 2020.06.20 — பச்சை — சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 18 43 48 52 — ஆங்கில எழுத்து: J

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 30,483,173.50

தொ.பே.: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம்: 1161 — சீட்டிழுப்பு திகதி: 20.06.2020 — நீலம்

Y 18 31 44 70

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,137,508

தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## வகுப்புக்கள்

தரம் 10, 11 ( க. பொ.த. சா / த )
மாணவர்களுக்கான
விஞ்ஞான பாட வகுப்புக்கள்
தனியாகவோ குழுவாகவோ
வீடு வந்து கற்பிக்கப்படும். (C-9740)

தொடர்பு : 077 909 7878



## இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி
நெல்லியடி கொடிகாமம்
புதுக்குடியிருப்பு சுன்னாகம்
மருதங்கேணி பருத்தித்துறை
சாவகச்சேரி திருகோணமலை
மானிப்பாய் வல்வெட்டித்துறை



(C-9624)

V2 TRAVELS 0768227499



## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் வசித்துவரும் குடும்பம் ஒன்றிற்கு உணவு தயாரிக்கவும் மற்றும் இதர வேலைகளைச் செய்வதற்கும் பெண் பணியாளர் தேவை. அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 313 3043


## பங்களாதேஷ் கிரிக்கெட் வீரருக்கு கொரோனா தொற்று




(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஷ்ரஃபி மோர்டாசாவிற்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதை நேற்று (சனிக்கிழமை) உறுதி செய்துள்ள அவரது குடும்பத்தினர், அவர் டாக்காவில் உள்ள அவரது வீட்டில் சுயதனிமைப்படுத்த ப்பட்டுள்ளார் என்றும் அறிவித்துள்ளனர். (ம-3)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் - இராமநாதன் வீதி
( கலட்டி ) க்கு அண்மையில்
பெரிய வீடு சகல வசதிகளுடன்
( வரையறைக்கு உட்பட்ட
காலத்திற்கு )
வாடகைக்கு உண்டு (3057)

தொடர்பு : 077 921 3830



## மணமக்கள் தேவை

1983 கனடா, 1990 லண்டன்,
1991 பிரான்சில் வசிக்கும் மணமகள்மாருக்கு
பட்டதாரி மணமகன்மார் தேவை.

இலங்கையிலும் மணமக்கள் தேவை. (3073)

076 475 2219 / 076 204 9298
077 023 7639 / 00447538950649



## VOLKSWAGEN BEETLE FOR SALE



(3051)

Tel : 075 053 2761



## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

IELTS, LIFESKILLS A1 மற்றும் GERMAN A1, DUTCH
வகுப்புக்கள் 29.06.2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.
இலவச பதிவுகளுக்கு : 0779265447 (10am - 5pm)

புதிய மாணவர்களுக்கு 25 வீதம் கட்டண கழிவு

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989



## FIXED JOB



Inner Circle

Job! Job! Job! .....
076 770 7759

நீங்கள் O/L பயின்றவரா ?
இவ் இலக்கத்துக்கு அழைத்து
உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க.


வட மாகாணத்தில் முதல் 40 பேருக்கு முன்னுரிமை.

- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சிக் காலத்தில் 24,500/= பின்னர் குறைந்தது 45,000/=

The Inner Circle ( Pvt ) Ltd
100/3, Manipay Road, ( முட்டாசுக்கடைச் சந்தி ) Jaffna. (3068)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.05.2020 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பக் குலவிளக்கு

அமரர்

## வேலுப்பிள்ளை குணபாலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று ( 21.06.2020 ) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (C - 9732)

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

இங்ஙனம் :-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.